**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.63/2024 P.W.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | லீனஸ் பிரபு | த–பெ | ஆரோக்கியசாமி |
| ஊர்: | : | | சமயம்: | |
| வயது: | : | 36/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | மேனேஜர், எஸ்.பி.ஐ. புதுவயல் கிளை | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.03.2025**

-------------------------------------------------------------------------------------------

07.03.2025

<u>முதல் விசாரணை :</u>

1) நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பானை வந்தது. வாடிக்கையாளர் சாந்தி என்பவரின் வங்கி கணக்கு பட்டியல் தாக்கல் செய்ய வந்திருந்தது. என்னிடம் காட்டப்படும் காசோலை எதிரிக்கு எங்கள் வங்கியில் இருந்து வழங்கப்பட்டதா என்றால் சரிதான். வழக்கு காசோலைகள் என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டுள்ளது என்றால் அன்றைய தினத்தில் Exceed Arrangement என்று உள்ளது. ம.சா.ஆ. 3 காசோலை வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்ட தேதியில் எதிரியின் வங்கி கணக்கில் 1 ரூபாய் 11 பைசா இருந்துள்ளது. ம.சா.ஆ. 5 காசோலைவசூலுக்கு தாக்கல் செய்யப்பட்ட தேதியில் எதிரியின் வங்கி கணக்கில் ரூபாய் 1,461/- இருந்துள்ளது. ம.சா.ஆ.7 காசோலைவசூலுக்கு தாக்கல் செய்யப்பட்ட தேதியில் எதிரியின் வங்கி கணக்கில் ரூபாய் 1168/- இருந்துள்ளது.

2) **எதிரியின் வங்கி கணக்கு பட்டியல் ம.சா.ஆ. 16 ஆகும்.** Exceed Arrangement என்ற திருப்பப்பட்டுள்ளதில் போதிய தொகை இல்லை என்ற காரணமும் உள்ளடக்கம் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை**

1) 05.03.2010 லிருந்து எதிரியின் வழக்கு காசோலைகளை தவிர வேறு காசோலைகள் திருப்பப்பட்டுள்ளதா என்றால் பாரத ஸ்டேட் வங்கி மூலமாக திருப்பப்படவில்லை. சரிபார்த்துதான் சொல்ல முடியும். எதிரி எத்தனை ஆண்டுகளாக எங்கள் வங்கியில் கணக்கு வைத்துள்ளார் என்றால் 05.03.2010 முதல் கணக்கு வைத்துள்ளார். எதிரிக்கு எங்கள் வங்கியில் சம்பள கணக்கு உள்ளதா என்றால் உள்ளது. எதிரியின் சம்பள கணக்கில் மாதம் எவ்வளவு ரூபாய் இருக்கும் என்றால் 11, 676/-.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா , B.Sc., B.L., (Hon's))
விரைவு நீதிபதி காரைக்குடி